# “எடப்பாடி கூறுவது பதில் அல்ல - பச்சைப் பொய்!”

**12.4.2026 - ஞாயிற்றுக்கிழமை அன்றைய ‘தி இந்து - தமிழ்திசை’ நாளிதழுக்கு எடப்பாடி பழனிச்சாமி அளித்த சிறப்புப் பேட்டியில், “ஸ்டாலின் ஆட்சியில் தமிழகம் பல துறைகளில் முன்னணி மாநிலமாக இருப்பதாக உங்கள் கூட்டணிக் கட்சியான பா.ஜ.க.வின் மத்திய அரசே சான்றிதழ் தந்திருக்கிறதே” என்று எழுப்பப்பட்ட கேள்விக்கு - எடப்பாடி பழனிச்சாமி அளித்த உண்மைக்கு மாறான பதிலை யொட்டியும் - அதனை மறுத்தும் ‘விடுதலை’ நாளிதழ், “எடப்பாடியார் கூறுவது பதில் அல்ல - பச்சைப் பொய்!” எனத் தலைப்பிட்டு, ஆதாரங்கள் பலவற்றுடன் கருத்து விளக்கம் ஒன்றை அளித்துள்ளது.**

அதன் விவரம் வருமாறு :-

**கேள்வி :** நீங்கள் என்னதான் திமுகவை குறை சொன்னாலும், ஸ்டாலின் ஆட்சியில் தமிழகம் பல துறைகளில் முன்னணி மாநிலமாக இருந்ததாக உங்கள் கூட்டணிக் கட்சியான பாஜகவின் மத்திய அரசே சான்றிதழ் தந்திருக்கிறதே?

**பதில்:** சான்றிதழைக் காட்டுங்கள் பார்க்கலாம். முதலமைச்சர் அவிழ்த்து விடும் புளுகு மூட்டைகளையே நீங்கள் கேள்வியாக்கியுள்ளது ஏற்கத்தக்கதல்ல.

‘இந்து தமிழ்த் திசை’ (12.4.2026 பக்கம் 9)

**‘இந்து தமிழ் திசை’ நாளேட்டின் கேள்விக்கு அ.இ.அ.தி.மு.க. பொதுச் செயலாளர் எடப்பாடி பழனிசாமி பதில் அளித்துள்ளார். இது பதில் அல்ல பச்சைப்பொய் என்பதுதான் உண்மை!**

**தமிழ்நாடு அரசின் சாதனைகள்பற்றி ஒன்றிய அரசு ஒப்புக் கொள்ளவில்லையா?**

**உண்மை நிலை இதோ!**

## ‘விடுதலை’ தோலுரிப்பு!

2021 ஆம் ஆண்டு மு.க. ஸ்டாலின் அவர்கள் தலைமையிலான அரசு பொறுப்பேற்றது முதல், “திராவிட மாடல்” ஆட்சியின் கீழ் பல்வேறு முன்னோடி நலத்திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. இதில் பல திட்டங்கள் ஒன்றிய அரசு மற்றும் அதன் தன்னாட்சி அமைப்புகளான நிதி ஆயோக் (NITI Aayog) ஆகியவற்றின் பாராட்டு களையும், உயர் தரவரிசைகளையும் பெற்றுள்ளன.

ஒன்றிய அரசு மற்றும் தேசிய அளவிலான அமைப்புகள் பாராட்டிய முக்கியமான திட்டங்களின் விவரங்கள்

1. ‘இல்லம் தேடிக் கல்வி’ கரோனா பேரிடர் காலத்தில் மாணவர்களிடையே ஏற்பட்ட கற்றல் இடைவெளியைக் குறைக்க கொண்டுவரப்பட்ட இத்திட்டத்தை ஒன்றிய கல்வி அமைச்சகம் வெகுவாகப் பாராட்டியது.

‘இது போன்ற ஒரு தன்னார்வலர் அடிப்படை யிலான கற்றல் முறை மற்ற மாநிலங்களுக்கும் ஒரு சிறந்த வழிகாட்டி’ என்று ஒன்றிய அரசு குறிப்பிட்டது.

2 லட்சத்திற்கும் அதிகமான தன்னார்வலர்கள் மூலம் சுமார் 34லட்சம் மாணவர்கள் பயனடைந்தனர்.

**‘மக்களைத் தேடி மருத்துவம்’**

சர்க்கரை நோய், ரத்த அழுத்தம் போன்ற தொற்றா நோய்களுக்கு வீட்டிற்கே சென்று மருந்து வழங்கும் இத்திட்டம் தேசிய அளவில் கவனம் ஈர்த்தது.

2022இல் ஒன்றிய சுகாதாரம் மற்றும் குடும்ப நலத்துறை அமைச்சகம் நடத்திய “பொது சுகாதார அமைப்புகளில் சிறந்த நடைமுறைகள்” குறித்த தேசிய மாநாட்டில் இத்திட்டம் ஒரு முன்மாதிரித் திட்டமாகத் தேர்ந்தெடுக்கப்பட்டது.



இத்திட்டத்தின் மூலம் ஒரு கோடிக்கும் அதிக மானோர் பயனடைந்துள்ளதாகத் தரவுகள் தெரிவிக்கின்றன.

**காலை உணவுத் திட்டம்**

அரசுப் பள்ளி மாணவர்களுக்குக் காலை உணவு வழங்கும் இத்திட்டம் உலகளாவிய கவனத்தைப் பெற்றதுடன், ஒன்றிய அரசின் பல்வேறு கொள்கை முடிவெடுப்பவர்களால் பாராட்டப்பட்டது.

இத்திட்டம் அமல்படுத்தப்பட்ட பிறகு பள்ளிகளில் மாணவர்களின் வருகை கணிசமாக அதிகரித்துள்ளதாகப் புள்ளி விவரங்கள் காட்டுகின்றன. தெலங்கானா போன்ற மற்ற மாநிலங்களும் இதைப் பின்பற்ற ஆர்வம் காட்டின.

**நான் முதல்வன்**

மாணவர்களின் தனித்திறனை மேம்படுத்தி அவர்களை வேலைவாய்ப்பிற்குத் தகுதியானவர் களாக மாற்றும் இத்திட்டத்தை ஒன்றிய திறன் மேம்பாட்டு அமைச்சகம் கவனித்து பாராட்டி யுள்ளது.

**நிதி ஆயோக் மற்றும் ஒன்றிய அரசின் தரவரிசைகள்**

ஒன்றிய அரசின் பல்வேறு குறியீடுகளில் தமிழ்நாடு முதலிடங்களைப் பிடித்துள்ளது:

SDG (நிலையான வளர்ச்சி இலக்குகள்): நிதி ஆயோக் வெளியிட்ட நிலையான வளர்ச்சி இலக்குகள் குறியீட்டில், வறுமை ஒழிப்பு, கல்வி மற்றும் ஆரோக்கியம் ஆகிய பிரிவுகளில் தமிழ் நாடு முன்னிலை மாநிலமாகத் திகழ்கிறது.

நிதி ஆயோக் வெளியிட்ட ஏற்றுமதி தயார் நிலை குறியீடு 2022இல் தமிழ்நாடு இந்தியாவிலேயே முதலிடம் பிடித்தது.

## கருஞ்சட்டை

பெரிய மாநிலங்களின் பட்டியலில் சுகாதாரம் மற்றும் மருத்துவக் கட்டமைப்பில் தமிழ்நாடு தொடர்ந்து முதல் மூன்று இடங்களுக்குள் இருந்து வருகிறது.

‘கலைஞர் மகளிர் உரிமைத் திட்டம்’ பெண்களுக்கு மாதம் ரூ.1,000 உதவித் தொகை நாட்டின் மிகப்பெரிய நேரடி பணப் பரிமாற்றத் திட்டங்களில் ஒன்றாகக் கருதப்படுகிறது.

‘புதுமைப் பெண் திட்டம்’ மாணவிகளுக்கு உயர் கல்விக்காக மாதம் ரூ.1,000 அரசுப் பள்ளிகளில் பயின்று கல்லூரி சேரும் மாணவிகளின் எண்ணிக்கை 27% அதிகரித்துள்ளது

மின் ஆளுமை (eGovernance)டிஜிட்டல் சேவைகள் டிஜிட்டல் இந்தியா விருதுகளில் தமிழ் நாடு அரசு பலமுறை விருதுகளை வென்றுள்ளது.

சுகாதாரதுறை திட்டங்கள் குறிப்பாக கருப்பை புற்றுநோய் தொடர்பான தமிழ்நாடு அரசின் தடுப்பூசித்திட்டத்திற்கு ஒன்றிய அரசு பாராட்டு தெரிவித்து மட்டுமல்லாமல், தாங்களே அந்தத் திட்டத்தை செயல்படுத்துவதாகவும் அத்தோடு அனைத்து மாநிலங்களிலும் இந்தத் திட்ட்த்தைக் கொண்டுவர மாநில அரசுகளுக்கு உத்தரவிட்டுள்ளது. (20.02.2026)

பல மாநிலங்களின் அரசுத்துறை செயலாளர்கள் தமிழ்நாட்டில் பள்ளிக்கல்வித்துறை, சுகாதாரம் மற்றும் உள்ளாட்சி வளர்ச்சித்திட்டங்களை நேரில் வந்து ஆய்வு செய்து சென்று அறிக்கையாக வழங்கி பிற மாநிலங்களிலும் தமிழ்நாடு அரசின் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது

**கடல் கடந்த காலை உணவுத்திட்டம்**

முதலமைச்சர்ஸ்டாலின் ‘காலை உணவுத்திட்டம்’ கனடா மற்றும் பிரிட்டன் அரசுகளில் கவனத்தை ஈர்த்து தாங்களும் அந்தத் திட்டத்தினை நடை முறைப்படுத்த உத்தரவிட்டுள்ளது. **(‘தினமலர் 11.03.2025)**

எடப்பாடி பழனிசாமி கூறியது பதில் அல்ல பல்டியே! பச்சைப் பொய்யே!!

இவ்வாறு ‘விடுதலை’ நாளிதழ், எடப்பாடி பழனிச்சாமியின் பொய்க்கூற்றை தோலுரித்துக் காட்டி யுள்ளது.

---

### கீழ்பென்னாத்தூர் தொகுதியில் கழக வேட்பாளர்

# கு. பிச்சாண்டி கிராமம் கிராமமாகச் சென்று வாக்குச் சேகரித்தார்!

*கீழ்பென்னாத்தூர், ஏப்.15-*

கீழ்பென்னாத்தூர் மதசார்பற்ற முற்போக்கு கூட்டணி வேட்பாளர் கு.பிச்சாண்டி வீடற்ற ஏழைகளுக்கு வீடுகள் கட்டித் தருவேன் என்று வாக்குறுதி மேலும் கடந்த கழக ஆட்சிக் காலத்தில் செய்த சாதனைகளை சொல்லி வாக்கு சேகரித்தார். செல்லும் இடங்களில் கழக அரசின் சாதனைகளை பட்டியலிட்டார்

கீழ்பென்னாத்தூர் துரிஞ்சாபுரம் மேற்கு ஒன்றியத்திற்குட்பட்ட பகுதிகளில் மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி வேட்பாளர் கு.பிச்சாண்டி தீவிர வாக்கு சேகரிப்பில் ஈடுபட்டார். பொதுமக்களை நேரில் சந்தித்து ஆதரவு கோரிய அவர், பல்வேறு கிராமங்களில் உற்சாக வரவேற்பைப் பெற்றார்.

அவர் மேற்கொண்ட பிரச்சாரத்தில் சேரியந்தல், வட ஆண்டாப்பட்டு, கிளியப்பட்டு ஆதிதிராவிடர் குடியிருப்பு, கிளியப்பட்டு, மேல்குன்னுமுடிஞ்சி, சடையனோடை, துரிஞ்சாபுரம் ஆதிதிராவிடர் குடியிருப்பு, வடகரும்பலூர், வடகரும்பலூர் ஆதிதிராவிடர் குடியிருப்பு, மல்லவாடி, புது மல்லவாடி, சாமிநாதபுரம், மோட்டூர், இந்திரா நகர், சத்திரம் கூட்ரோடு, இனாம்காரியந்தல், இனாம்காரியந்தல் ஆதிதிராவிடர் குடியிருப்பு, வெங்காயவேலூர், தீபம் நகர் உள்ளிட்ட பகுதிகளில் பொதுமக்களை சந்தித்தார்.

பிரச்சாரத்தின் போது அவர் பேசியதாவது:

“முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களின் கடந்த ஆட்சி காலங்களில் துரிஞ்சாபுரம் ஊராட்சி ஒன்றியத்தில் பல்வேறு வளர்ச்சி பணிகளை செய்துள்ளேன். அகரம் சிப்பந்தி ஊராட்சியில் உள்ள சொரகுளத்தூர் மற்றும் தென்பள்ளிப்பட்டு இலங்கை தமிழர் மறுவாழ்வு முகாம்களில் வசிப்பவர்களுக்கு 252 புதிய வீடுகள் கட்டி தந்துள்ளேன்.

பூதமங்கலம் ஆதிதிராவிடர் காலனியில் பல்நோக்கு கட்டிடம் கட்டி தந்துள்ளேன். அரசு ஆரம்ப சுகாதார நிலையம் அருகில் பயணியர் நிழற்குடை அமைத்துத் தந்துள்ளேன். பூதமங்கலம் துர்கம் பகுதியில் கூடுதல் கட்டிடங்கள் கட்டி தந்துள்ளேன்.

ஊசம்பாடி மற்றும் நூக்காம்பாடி ஊராட்சிகளில் தரமான சிமெண்ட் சாலைகள் அமைத்துத் தந்துள்ளேன். களஸ்தம்பாடி கூட்ரோடு பகுதியில் பயணியர் நிழற்குடை அமைத்துத் தந்துள்ளேன்.

துரிஞ்சாபுரம் ஊராட்சி மட்டப்பாறை கிராமத்தில் பல்நோக்கு கட்டிடம் கட்டி தந்துள்ளேன். மல்லவாடி உயர்நிலைப் பள்ளிக்கு டெஸ்க்பெஞ்ச் வழங்கியுள்ளேன். மல்லவாடி மறுவாழ்வு இல்லம் அருகில் சிமெண்ட் சாலை அமைத்துத் தந்துள்ளேன்.

துரிஞ்சாபுரம் ஆதிதிராவிடர் பகுதியில் பல்நோக்கு கட்டிடம் கட்டி தந்துள்ளேன். இனாம்காரியந்தல் காலனியில் மழைநீர் வடிகால் கால்வாய் அமைத்துத் தந்துள்ளேன். இனாம்காரியந்தல் ஊராட்சியில் பெரிய ஏரி ஓடையில் தடுப்புச்சுவர் அமைத்துத் தந்துள்ளேன்.

இவ்வாறு பல்வேறு திட்டங்களை இந்த பகுதியில் செயல்படுத்தி செய்துள்ளேன்” என்று தெரிவித்தார்.

தொடர்ந்து அவர்வாக்குறுதிகளை அறிவித்தார்:

“மீண்டும் என்னை வாக்களித்து தேர்ந்தெடுத்தால் மேலும் பல மக்கள் நலத் திட்டங்களை செயல்படுத்துவேன். தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் அறிவித்த திராவிட மாடல் 2.0 திட்டங்களின் அடிப்படையில்,

இல்லத்தரசி திட்டத்தின் கீழ் ரூ.8000 மதிப்புள்ள கூப்பன் வழங்கப்படும்

புதுமைப்பெண், தமிழ் புதல்வன் திட்ட உதவி ரூ. 1000 இலிருந்து ரூ.1500 ஆக உயர்த்தப்படும்

மாற்றுத்திறனாளிகளுக்கான உதவித்தொகை ரூ.1500 இலிருந்து ரூ.2500 ஆக உயர்த்தப்படும்

கலைஞர் மகளிர் உரிமைத்தொகை ரூ.1000 இலிருந்து ரூ.2000 ஆக உயர்த்தப்படும் முதியோர், விதவை உள்ளிட்டோருக்கு உதவித்தொகை உயர்த்தப்படும் கிராமம் தோறும் பேருந்து வசதி அதிகரிக்கப்படும் விவசாயிகளுக்கு மீட்டர் இல்லாத நவீன மின் சார பம்பு செட்டுகள் வழங்கப்படும்

வீடற்ற ஏழைகளுக்கு 10 லட்சம் வீடுகள் கட்டித் தரும் திட்டம் செயல்படுத்தப்படும் எனது வாழ்நாள் முழுவதும் இந்த தொகுதி மக்களுக்காக இரவு பகலின்றி உழைப்பேன். எனவே, என்னை பெருவாரியான வாக்கு வித்தியாசத்தில் வெற்றி பெறச் செய்யுமாறு கேட்டுக்கொள்கிறேன்” என்றார்.

இந்த பிரச்சாரத்தில் துரிஞ்சாபுரம் மேற்கு ஒன்றிய செயலாளர் வி பி அண்ணாமலை பா. ராமஜெயம், ஒருங்கிணைப்பாளர் கு.பாலசுப்பிரமணி, பொறுப்புக் குழு உறுப்பினர்கள் எம். குமார், சி. சிவராமன், பி. தினகரன், வி. கோவிந்தசாமி, ஜே. சிவகுமார், ஏ. சக்திவேல், எம்.ஆர். குபேரன், எம்.ஆர்.கே. வினோத் குமார், வி. தாமோதரன், பி. கணேசன், மூர்த்தி, கே. பழனி, பி. அருணாச்சலம், ராதாகிருஷ்ணன், டி. மோகன், ஆறுமுகம், பொன். கருணாநிதி, எல். சதாசிவம், எஸ். பிரபாகரன், எம்.எஸ். தங்கமணி, கே. சேகர், எம். கணேசன், டி. சண்முகம், எஸ். நடராஜன், ஆர். ஆதிமூலம் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர். மேலும் கூட்டணி கட்சி சார்ந்த காங்கிரஸ் விசிக தேமுதிக முஸ்லிம் லீக் கட்சி மனிதநேய மக்கள் கட்சி மனிதநேய ஜனநாயக கட்சி நிர்வாகிகள், மற்றும் திமுக தொண்டர்கள், இளைஞர் அணி மற்றும் மகளிர் அணி உறுப்பினர்கள் பெருந்திரளாக பங்கேற்றனர். பொதுமக்கள் உற்சாகமாக வேட்பாளரை வரவேற்று, பெண்கள் ஆரத்தி எடுத்தும், மாலை அணிவித்தும் ஆதரவு தெரிவித்தனர்.




கீழ்பென்னாத்தூர் மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி வேட்பாளர் கு. பிச்சாண்டி வீடற்ற ஏழைகளுக்கு வீடுகள் கட்டித் தருவேன் என்று வாக்குறுதி அளித்தும் கடந்த கழக ஆட்சிக் காலத்தில் செய்த சாதனைகளை சொல்லியும் வாக்கு சேகரித்தார். செல்லும் இடங்களில் கழக அரசின் சாதனைகளை பட்டியலிட்டார்.



சட்ட மாமேதை அண்ணல் அம்பேத்கர் அவர்களின் 135வது பிறந்தநாளை முன்னிட்டு விருத்தாசலம் பாலக்கரையில் உள்ள திருவுருவச் சிலைக்கு கடலூர் மேற்கு மாவட்டக் கழக செயலாளர், அமைச்சர், திட்டக்குடி சட்டமன்றத் தொகுதி வேட்பாளர் சி.வி. கணேசன் மற்றும் தேசிய முற்போக்கு திராவிட கழக பொதுச்செயலாளர் விருத்தாசலம் சட்டமன்ற தொகுதி வேட்பாளர் திருமதி பிரேமலதா விஜயகாந்த் ஆகியோர் மாலை அணிவித்து மரியாதை செலுத்தி உறுதிமொழி ஏற்றனர். உடன் கழக நிர்வாகிகள் மற்றும் தோழமைக் கட்சி நிர்வாகிகள் உள்ளனர்.

---

### வாசுதேவநல்லூர் தொகுதியில்

# புளியங்குடியில் துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் பிரச்சாரம்!

## தென்காசி வடக்கு மாவட்டச் செயலாளர் ஈ.ராஜா எம்.எல்.ஏ.அறிக்கை!



*தென்காசி.ஏப்.15-*

முதலமைச்சர், கழகத் தலைவர் அவர்களின் வழி காட்டுதலின்படி துணை முதலமைச்சர், கழக இளைஞர் அணி செயலாளர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் தமிழ்நாடு முழுவதும் மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணியின் வெற்றி வேட்பாளர்களை ஆதரித்து சூறாவளி சுற்றுப்பயணம் மேற்கொண்டு வருகிறார்கள்.அதன்படி தென்காசி மாவட்டம் வாசுதேவநல்லூர் சட்டமன்ற தொகுதி மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணியின் கழக வேட்பாளர் ஈ.ராஜா எம்.எல். ஏ.வை (என்னை)ஆதரித்து

இன்று (15.04.2026 புதன் கிழமை) மாலை 4 மணி அளவில் வாசுதேவநல்லூர் தொகுதிக்கு உட்பட்ட புளியங்குடி காமராஜர் சிலை முன்பு உதயசூரியன் சின்னத்திற்கு வாக்குகளைக் கேட்டு மாபெரும் பிரச்சாரம் மேற்கொள்ள உள்ளார்கள்.இதில் கழக நிர்வாகிகள், மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணியின் நிர்வாகிகள்,தோழர்கள், பொதுமக்கள் திரளாக கலந்து கொள்ள வேண்டும் என தென்காசி வடக்கு மாவட்டச் செயலாளர் ஈ. ராஜா எம்.எல்.ஏ. தெரிவித்துள்ளார்.

இதில் மாவட்ட கழக நிர்வாகிகள், மாநில அணி நிர்வாகிகள்,ஒன்றிய,நகர, பேரூர்,கிளை,வார்டு செயலாளர்கள் நிர்வாகிகள், இளைஞரணி உள்ளிட்ட மாவட்ட சார்பு பணி அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள்,நிர்வாகிகள், கழகத் தோழர்கள், மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி தலை வர்கள், தொண்டர்கள், வாக்காளப் பெருமக்கள் அனைவரும் திரளாக பங்கேற்க கேட்டுக்கொள்கிறேன்.

ஸ்டாலின் தொடரட்டும்!தமிழ்நாடு வெல்லட்டும்!

இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.



திராவிட முன்னேற்றக் கழகம் தலைமையிலான மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி சார்பில், ரிஷிவந்தியம் சட்டமன்ற தொகுதியில் 3வது முறையாக போட்டியிடும் கழக வேட்பாளர், கள்ளக்குறிச்சி தெற்கு மாவட்ட கழக செயலாளர், ரிஷிவந்தியம் சட்டமன்ற உறுப்பினர் வசந்தம் க.கார்த்திகேயன் ரிஷிவந்தியம் வடக்கு ஒன்றியம், பெரிய கொள்ளியூர், இளையனார் குப்பம், வட மாமந்தூர், ஈருடையாம் பட்டு ஆகிய ஊராட்சியில் பொதுமக்களை வீடு வீடாக நேரில் சந்தித்து, தமிழ்நாடு முதலமைச்சர், கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களின் தலைமையிலான திராவிட மாடல் நல்லாட்சியின் சாதனைகளை எடுத்துரைத்து, உதயசூரியன் சின்னத்தில் வாக்குகளை சேகரித்தார், இதில் கழக நிர்வாகிகள் மற்றும் கூட்டணிக் கட்சிகளைச் சேர்ந்த நிர்வாகிகள் பலர் பெருந்திரளாக கலந்து கொண்டனர்.